தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

# கரூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(18.10.2023 முதல் 22.10.2023)

அறிக்கைஎண்: 83/2023 தேதி : 17.10.2023

## கரூர் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 32 - 34 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 23 - 26 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

## கரூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (18.10.2023 முதல் 22.10.2023).

| கடந்தவாரவானிலை (13.10.2023 முதல் 16.10.2023) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (18.10.2023 முதல் 22.10.2023) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 13/10 | நாள்-2 14/10 | நாள்-3 15/10 | நாள்-4 16/10 | தேதி | நாள்-1 18/10 | நாள்-2 19/10 | நாள்-3 20/10 | நாள்-4 21/10 | நாள்-5 22/10 |
| 0.3 | 0.0 | 39.2 | 4.9 | மழை (மி.மீ.) | 15 | 0 | 8 | 12 | 10 |
| 34 | 34 | 32 | 33 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 32 | 32 | 32 | 31 | 31 |
| 26 | 26 | 23 | 24 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 24 | 24 | 24 | 23 | 23 |
| 7 | 7 | 6 | 8 | மேகமூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 7 | 7 |
| 86-71 | 85-76 | 90-66 | 95-96 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 95-76 | 95-76 | 95-76 | 92-74 | 92-74 |
| 12 | 7 | 11 | 8 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 15 | 15 | 15 | 12 | 12 |
| கிழக்கு | வட கிழக்கு | மேற்கு வட மேற்கு | கிழக்கு தென் கிழக்கு | காற்றின் திசை | கிழக்கு | கிழக்கு | கிழக்கு | கிழக்கு தென் கிழக்கு | கிழக்கு தென் கிழக்கு |

## கரூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். 18.10.2023, 20.10.2023, 21.10.2023 மற்றும் 22.10.2023 லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 31 – 32 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23 - 24 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 92 - 95 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 74 - 76 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 12 - 15 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | உழவர் பெருமக்கள் அனைவரும் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் பரிந்துரைக்கப்பட்ட வேளாண் சார்ந்த செயலிகளை பதிவிறக்கம் செய்து பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளபடுகிறது (TNAU AAS, Meghdoot and DAMINI). |
| | | வடிகால் வாய்க்கால்களை தூர்வாரி பன்னை குட்டையுடன் முறையாக இணைத்து மழை நீரை சேமிக்கவும். |
| | | பயிர்களுக்கு உரம் இடுவது மற்றும் பூச்சி மருந்து தெளிப்பதை தவிர்க்கவும் |
| நெல் | நடவு வயல் | எதிர்பார்க்கப்படும் மழையை கருத்தில் கொண்டு தண்ணீர் பாய்ச்சுவதை தவிர்க்கவும் / தள்ளிபோடவும். |
| | | தற்போது நிலவக்கூடிய வானிலையின் காரணமாக நெல்லில் குருத்துப்பூச்சி தோன்ற வாய்ப்புள்ளது. குருத்துப்பூச்சிகளை கட்டுப்படுத்த மழை நின்றபின் இனக் கவர்ச்சிப்பொறிகளை ஏக்கருக்கு 4 என்ற அளவில் வைத்து தாய் அந்துப் பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம். மேலும் இதனைக் கட்டுப்படுத்த புரோபனோபாஸ் மருந்தினை ஏக்கருக்கு 400 மில்லி (அ) கார்டிராப் ஹைட்ரோகுளோரைடு குருணைகளை ஏக்கருக்கு 6 கிலோ வீதம் சம அளவு மணலுடன் கலந்தும் இடலாம். |
| கால்நடைகள் | மாடு | பருவ மழை தொடங்குவதற்க்கு முன்னர் கால்நடைகளுக்கு கோமாரி நோய்க்கான தடுப்பூசி அளிப்பதனை உறுதி செய்து கொள்ளவும். |

## குறுஞ்செய்தி

வடிகால் வாய்க்கால்களை தூர்வாரி பன்னை குட்டையுடன் முறையாக இணைத்து மழை நீரை சேமிக்கவும்.

.

**இயக்குநர்**